**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண். 210/2023**

நாள்: 27.07.2026.

பெயர்: ராமலிங்கம் (பி.வா.சா.1) த/பெ: சிவபிரகாசம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1) சர்வே எண்.46/10A என்பது எனது இடம் என்றால் சரிதான். எனது இடத்திற்கு வடபுறமும், தென்புறமும் வாதியின் இடம் என்றால் சரிதான், அதில் எனது சொத்திற்கு வடபுறம் சொத்தை 2 ஆண்டுகளுக்கு முன்பு தான் வாதி கிரையம் பெற்றார். எனது நிலத்தில் நான் ஆர்.எஸ்.பதி பயிர் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது இடத்திற்கு வடபுறமும், கீழ்புறமும் 3 மீட்டர் இடைவேளி விட்டு தான் ஆர்.எஸ்.பதி பயிர் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது இடத்திற்கு வடபுறமும், கீழ்புறமும் உள்ள வாதியின் இடத்தில் தற்போது சவுக்கு பயிர் செய்து வருகிறார் என்றாலும், முன்னர் அதில் நெற்பயிர் செய்து வந்தார் என்றாலும் சரிதான். நான் வைத்துள்ள ஆர்.எஸ்.பதி மரங்களினால் வாதிக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக தான் 3 மீட்டர் இடைவேளி விட்டு உள்பக்கமாக பயிர் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் விட்டுள்ள 3 மீட்டர் இடைவேளி பத்தாத காரணத்தினால் தான் 5 மீட்டர் இடைவேளி விடவேண்டும் என்பதற்காக வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2) 5 மீட்டர் இடைவேளி விட்டால் வாதிக்கு பாதிப்பு இன்னும் குறையும் என்றால் சரிதான். எனது சொத்தை காட்டிலும் வாதியின் நிலம் மேடாக உள்ளது என்றால் சரிதான், வாதி மண் அடித்து மேடாக்கினார், அதன்பின்னர் எனது சொத்தில் பயிர் செய்த நெற்பயிர் சேதமாகிவிட்டது, அதன் பின்னர் 6 மாதம் கழித்து எனது சொத்தில் 15 செண்டில் மட்டும் நான் ஆர்.எஸ்.பதி பயிர் செய்தேன். இயற்கையாகவே வாதியின் இடம் மேடானது என்றாலும், எனது இடம் பள்ளமானது என்றாலும் சரியல்ல. எனது இடத்திற்கும், வாதியின் இடத்திற்கும் தென்புறம் ஓடை என்றால் சரிதான். எனது நிலத்தின் உபரி நீரும், வாதியின் நிலத்தின் உபரி நீரும் தென்புற ஓடையில் வடியும் என்றால் சரியல்ல.

3) எனது சொத்தின் தென்கிழக்கு மூலையில் வா.சா.ஆ.1ல் கண்ட B எனும் பகுதியில் சர்வே கள் உள்ளதா என்றால் உள்ளது, அந்த சர்வே கள்ளை நான் பிடிங்கி எறிந்துவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த சர்வே கள்ளின் அருகில் வாதியின் இடத்தில் ஒரு பூவரச மரம் இருந்தது என்றால் சரியல்ல, அது அரசாங்க இடத்தில் தற்போது வரை இருந்துவருகிறது. வாதி இடத்தில் இருந்த ரூ.5,000/– மதிப்புள்ள பூவரச மரத்தை நான் வெட்டிவிட்டேன் என்றால் சரியல்ல. வாதியின் மரத்தை வெட்டியதற்காக வாதிக்கு நான் ரூ.5,000/– நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது இடத்தில் உள்ள ஆர்.எஸ்.பதி மரத்தினால் வாதிக்கு ரூ.15,000/– மகசூல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றாலும், அந்த ரூ.15,000/–யை நான் வாதிக்கு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் எனது இடத்தில் வா.சா.ஆ.1ல் சிவப்பு நிறமிட்ட பகுதியை போல் 5 மீட்டர் இடைவேளி விட்டால் தான் வாதிக்கு பயிர் சாகுபடியில் நஷ்டம் குறையும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஆரஸ்பதி மரம் பயிரிட எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள ஆரஸ்பதி மரங்களை வெட்டி நீக்கிகொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல, தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/சி.ராமலிங்கம்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.